## பறவை காய்ச்சல்

### கோழிப் பண்ணை விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்:

- பண்ணைகளில், காட்டுப்பறவைகள் நேரடியாக நுழைவதைத் தடுக்க வேண்டும்.
- கோழிப்பண்ணைகள், வான்கோழி மற்றும் வாத்து பண்ணைகளில் இருந்து விலகி இருக்க வேண்டும்.
- மனிதர்கள், வாகனங்கள் மற்றும் விலங்குகள் பண்ணைகளை இயல்பாகக் கடந்து செல்வதைத் தவிர்க்க வேண்டும்.
- விவசாயப் பண்ணைகளுக்கு இடையே பண்ணைக்கருவிகளைப் பரிமாறிக் கொள்ளக்கூடாது.
- குறிப்பிட்ட காலங்களில், சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- கோழிப்பண்ணைகளில், வழக்கத்திற்கு மாறான இறப்பு காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குத் தெரிவிக்க வேண்டும்.

**பறவை காய்ச்சலின் அறிகுறிகள்:**

- தலை மற்றும் தாடை வீக்கம், சேவல் கொண்டை நீல நிறத்தில் காணப்படுதல் மற்றும் சோர்வாக இருத்தல்
- திடீர் இறப்பு
- சுவாசக்கோளாறு
- தசை மற்றும் கால்களில் இரத்தம் வடிதல்







**மனிதர்களில் பாதிப்பு**

- பறவைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்ட பண்ணைகளில் மனிதர்கள் வேலை பார்க்கும் பொழுது இந்நோய் கிருமிகள் சுவாச/ மூச்சுக்குழாய் வழியாக சென்று பாதிப்பை ஏற்படுத்துகின்றன.
- இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காய்ச்சல், இருமல் மற்றும் தொண்டை கரகரப்பு இருக்கும்.
- நன்கு வேகவைத்த கோழி இறைச்சி மற்றும் முட்டை சாப்பிட்டால் இந்நோய் பரவாது.
- தடுப்பூசி போடுவதன் மூலம் இந்நோய் வராமல் தடுக்கலாம். ஆனால் முற்றிலும் குணப்படுத்த முடியாது.
- பறவைக்காய்ச்சல் நோய் பரவுவதைத் தடுக்க கடுமையான காவல் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும்.

**ஆதாரம்:**

மண்டல இணை இயக்குநர்,<br>
கால்நடை பராமரிப்புதுறை,<br>
கோயம்புத்தூர்.